**அரச சேவைகள் நலன்புரி நிதியம் - 2022**

**----------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

அரச சேவைகள் நலன்புரி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை ரூபா மில். | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 267,379 ஆக காணப்பட்டதுடன், ஒவ்வொரு அங்கத்தர்கள் தொடர்பிலும் தகவல்கள் தரவுக் கட்டமைப்பொன்றினுள் உள்ளடக்கப்படாத காரணத்தால் பங்களிப்பு பணம் பெறுவனவு மற்றும் | | ஒவ்வொரு அங்கத்தர்கள் தொடர்பிலும் தகவல்கள் தரவுக் கட்டமைப்பொன்றினுள் காணப்படாமை. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு பங்களிப்பு செய்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 267,379 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது, கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியான அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு 2022 இன் புதிய அங்கத்தவர்களை சேர்த்து, நலன்கள் செலுத்தப்பட்ட | மறையான தரவுக் கட்டமைப்பொன்று பேணப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொடுப்பனவினை சரியாக கணக்கு வைக்கும் நடைமுறையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை. மற்றும் ஆண்டின் இறுதித் திகதியில் பெற்றுக்கொள்ள வேண்டிய பங்களிப்பு பணம் மற்றும் செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | | அங்கத்தவர்கள் கழிக்கப்பட்ட பின்னரான எண்ணிக்கை ஆகும். | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த பெற வேண்டிய அரசின் பங்களிப்புத் தொகைக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால்அந்த நிறுவனங்களிலிருந்து எந்த பங்களிப்பாளர்களுக்கு பெற வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | 212.20 | தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை | தனிப்பட்ட கணக்குகளை பேணாமையால் இந்த பெறுமதி எந்த பங்களிப்பாளரின் மீதி என்பது வெளிப்படுத்தப்படவில்லை. | அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகள் தொடர்பில் தரவுக் கட்டமைப்பினை பேணுதல் மூலம் மீதிகளின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | ஒவ்வொரு அங்கத்தவருக்கமைய ஒதுக்கீடு செய்யக்கூடிய தனிப்பட்ட மீதி பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுட்ன, கட்டாயப் பங்களிப்பு கணக்கின் மீதி மற்றும் அரசின் பங்களிப்பு பணக் கணக்கின் மீதிகளின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 33,593.60<br>51,808.74 | தனிப்பட்ட மீதிகளின் பட்டோலை | இந்த கணக்கு மீதியினை உறுதிப்படுத்துவதங்கு தனிப்பட்ட கணக்குகளை பேணுதல் அத்தியாவசியமற்றது என்பதுடன், இதற்காக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு முறையாக பேணப்படுதல் அத்தியாவசியமாகும். தொடர்ந்தும் அங்கத்துவ இலத்தினை பெற்றுக்கொள்ளாது செயற்படும் நிறுவனங்கள் காணப்படுகின்றமையால் இது ஓரளவு சிரமமான | தரவுக் கட்டமைப்பொன்றினை பேணுவதன் மூலம் மீதிகளின துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியொன்றாக அமைந்துள்ளது. | |
| (ஈ) | தன்னார்வ பங்களிப்புப் பணக் கணக்கின் மீதி தொடர்பில் உரித்து கோருபவர்களின் தகவல்களுடனான பட்டோலைகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாமையால் அந்த மீதியின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 51.98 | உரித்து கோருபவர்களின் தகவல்களுடனான பட்டோலைகள | தன்னார்வ பங்களிப்புப் பணத்திற்கு அங்கத்தவர்களின் பங்களிப்பு தற்போது இடம்பெறுவதில்லை என்பதுடன், கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்காக தகவல்களை எழுத்து மூலம் வரவழைத்து அரச சேவைகள் நலன்புரி நிதிய பிரிவிற்கான தகவல்களுடன் ஒப்பிடப்பட்டு உறுதிப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | தரவுக் கட்டமைப்பொன்றினை பேணுவதன் மூலம் மீதிகளின துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1942 இன் அரச சேவைகள் நலன்புரி நிதிய கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதியாண்டும் நிறைவடைந்த பின்னர் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் அத் திகதியில் உள்ளபடியாக அங்கத்தவர் கணக்குகளிலுள்ள மீதிகளை பங்களிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் தேவைப்பாட்டினை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட கணக்கு மீதிகளை வழங்குவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பங்களிப்பு இணையவழியின் ஊடாக அனுப்பும் நடைமுறை பெரும்பாலான நிறுவனங்களினால் பின்பற்றப்படாத காரணத்தால் தனிப்பட்ட கணக்குகளை பேணிச் செல்ல முடியாதிருந்தது. | அதிகாரச் சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 8,273.96 மில்லியனான மிகையாக காணப்பட்டதுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 6,570.59 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதிப் பெறுபெறுகளில் ரூபா 1,703.37 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 1,707.58 மில்லியனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, புதிதாக சேர்ந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை, ஆண்டினுள் கொடுப்பவு மேற்கொண்டு விலகிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான அங்கத்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு சேரும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை (புதிய அங்கத்தவர்கள்) மற்றும் ஆண்டினுள் கிடைத்த விண்ணப்பங்களுக்கு கொடுப்பனவு மேற்கொண்ட பின்னர் அங்கத்துவம் இரத்தாகுதல் / நலன்களை பெற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை சீராக்கப்பட்டதன் பின்னர் அரச சேவைகள் நலன்புரி நிதியத்தின் தற்போதைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை கணிப்பிடப்படுகின்றது. இந்த எண்ணிக்கை கடந்த வருட கணக்குகளில் காணப்படும் இறுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக நிதியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. | முறையான தரவுக் கட்டமைப்பு பேணப்பட வேண்டும். |
| (ஆ) வட்டி வருமானத்தை அங்கத்தவர்களிடையே ஒதுக்கீடு செய்வதற்கு ஆரம்ப மாதத்தின் ஒதுக்கப்பட்ட பெறுமதி ரூபா 8,273.96 மில்லியன் சராசரி பெறுமதியை அடிப்படையாக கொண்டு விகிதம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த விகிதம் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை கணக்காய்வுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. மீளாய்வாண்டின் போது ரூபா 1,741.90 மில்லியன் அங்கத்தவர்களிடையே பகிரப்படாது பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தமையால் வட்டி வருமானம் பங்களிப்பாளர்களிடையே பகிரப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கடந்த காலத்திலிருந்து இந்த முறைக்கு வட்டி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி விகிதத்தை முகாமைத்துவ சபை தீர்மானிக்கிறது, அதன்படி 2022 ஆம் ஆண்டில் ரூபா 1,741.90 மில்லியன் பொது ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. நிதியத்தின் கையிருப்பு மூலம் நிதி வலிமையை அதிகரிக்கவும் முதலீடுகள் மூலம் வட்டி வருவாயை அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | வட்டி வருமானத்தை வழங்குவதற்கான முறையான அடிப்படையை அங்கீகரிக்க வேண்டும். |